தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 15,

2012 ஏப்ரல் 27, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

சிறந்த முயற்சி, நிறைந்த அறிவு ஆகிய இரண்டினையும் கொண்டு இடைவிடாது செய்கின்ற நல்ல செயல்களால் ஒருவருடைய குடிப்பெருமை உறுதியாய் உயர்வடையும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

178—

முதியோர் இல்லம்

***5555—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, டி. பாப்பான்குளத்தில் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 ஏப்ரல் 27

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் மத்திய, மாநில அரசு மானியம் பெற்று, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக இரண்டு முதியோர் இல்லங்கள் நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற அறிவிப்பையொட்டி, ஒவ்வொரு வட்டாரத்திலும் முதியோர் இல்லம் மற்றும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்படும் என்கிற அறிவிப்பையொட்டி சிவகங்கை, மானாமதுரை வட்டாரங்களில் 2 ஒருங்கிணைந்த வளாகங்கள் தொடங்கப்படும் என்றும், இனி வருங்காலத்தில் அனைத்து வட்டாரங்களிலும் தொடங்கும்போது திருபுவனம் வட்டாரத்திலும் ஏற்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, முதியோர் இல்லம் ஒன்று தொடங்குவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லம் ஒன்று தொடங்க விரும்பும் தொண்டு நிறுவனங்கள் இலாப நோக்கமின்றி செயல்பட . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதியோர் இல்லம் தொடங்குவதற்கு என்னென்ன தேவைகள், தகுதிகள் இருக்க வேண்டும் என்கின்ற அந்த பதிலைச் சொல்கின்றார்கள். தயவுசெய்து கவனிக்கக் கேட்டுக்கொள்கின்றேன். மீண்டும், மீண்டும் அதே subject-இல் துணைக் கேள்வியை தயவுசெய்து கேட்காதீர்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை தயவுசெய்து கேளுங்கள்.*

2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சட்டங்களின் பதிவுச் சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டம், அறநிலையங்களுக்கான சட்டம் ஆகியவற்றின்கீழ் தொண்டு நிறுவனம் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ் விண்ணப்பிப்பதற்கு முன்பதிவு செய்து, இரண்டு வருடங்கள் முதியோர், குழந்தைகளுக்கான திட்டங்கள் நடத்துவதில் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இலாப நோக்கின்றி செயல்படும் நிறுவனமாக இருக்க வேண்டும். சாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் இருக்க வேண்டும். தேவையான கட்டமைப்பு வசதிகளுடன் நிலையானதாக இருக்க வேண்டும். முதியோர், ஆதரவற்ற குழந்தைகள் இல்லம் அமைப்பதற்கு 7,700 சதுர அடி இடம் தேவைப்படுகிறது. முதியோர் இல்லம் அமைப்பதற்கு 3,500 சதுர அடியும், குழந்தைகள் இல்லம் அமைப்பதற்கு 4,200 சதுர அடியும் அமைப்பில் இருந்தால், தொண்டு நிறுவனங்கள் இந்தத் தகுதிகளுக்கு உட்பட்டு வந்தால், அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் இல்லம் ஒன்று அமைப்பதற்கு எவ்வளவு மானியம் தேவைப்படுகிறது? ஒரு முதியோருக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது, ஒரு குழந்தைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கான உணவீட்டுச் செலவு 450 ரூபாய், முதியோர்களுக்கான உணவீட்டுச் செலவு 500 ரூபாய் என்கிற முறையில் வழங்கப்படுகிறது. ஓர் ஆண்டுக்கு, ஒரு முதியோர் இல்லத்திற்கு 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 56*

இலட்சம் ரூபாயை மாநில அரசு மானியமாக வழங்கி வருகிறது. இந்தப் பணத்தில் முதியோர்களுக்கு உணவு, போதுமான தங்கும் இட வசதி, மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளும் அடங்கும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பெற்ற பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்ட பெற்றோர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய வகையிலே, முதியோர் இல்லம் எல்லா வட்டங்களிலும் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்து வட்டாரங்களிலேயும் தொடங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். இதிலே முன்னோட்டமாக 64 வட்டாரங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த 64 வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டதற்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதும்-கன்னியாகுமரி மாவட்டம் என்று இல்லை; அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற வட்டாரங்களிலும் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல். (குறுக்கீடு) வினா வேண்டாமா? அடுத்து, வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*